DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender /Miscellaneous : **CC.No. 283 /25**

Deposition of witness for : ம.சா. 3

Name : வெங்கடேஷ்குமார் (கிளை மேலாளர் –காரியாபட்டி Esaf Bank)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day March of 2026

**முதல் விசாரணை :–**

நான் தற்போது மல்லாங்கிணர் Esaf Bank ல் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலை எங்கள் கிளையின் காசோலை என்றால் சரிதான். எங்கள் வங்கியில் எந்த நபர்கள் வங்கி கணக்கு வைத்துள்ளார்களே அவர்களுக்கு மட்டும் தான் காசோலை வழங்குவோம் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையில் ரூ.20 லட்சத்திற்கு தொகை நிரப்பப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆவணமான காசோலையில் மணிகண்டம் மாரநாடு என்று உள்ளது என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

மணிகண்டன் என்பவர் எங்களது வங்கியில் எவ்வளவு பணம் வைத்திருப்பார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது, அதை வங்கி கணக்கை பார்தால் தான் சொல்ல முடியும். எங்களது கணக்கு வைத்துள்ள

அனைவருக்கும் காசோலை கொடுக்கப்படும் என்றால் சரிதான். மணிகண்டன் என்பவருக்கு வழங்கப்பட்ட காசோலையில் எத்தனை காசோலைகள் பரிவர்த்தணைக்காக பயன்படுத்தப்பட்டது என்றால் அதை குறிப்பிட்டு அவரது வங்கி பரிவர்த்தனையில் பார்த்தால் தான் தெரியும். எனக்கு இன்றைய தேதியில் சாட்சி சொல்ல சம்மன் எதுவும் வந்ததா என்றால், இதற்கு முன்னால் இருந்த வாய்தாவில் சம்மன் வந்தது. அந்த சம்மன் வாய்தா தேதி அன்று தான் எனக்கு கிடைக்கப்பட்டது என்பதால் அன்றைய தேதியில் என்னால் சாட்சியமளிக்க வர முடியவில்லை.

**மறுவிசாரணை :–**

இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Calender /Miscellaneous | : | **CC.No.283/25** |
| Deposition of witness for | : | ம.சா.2 |
| Name | : | மனோஜ் (கிளை மேலாளர் –காரியாபட்டி SBI Bank) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day March of 2026

**முதல் விசாரணை :–**

நான் தற்போது காரியாபட்டி SBI Bank ல் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 காசோலை எங்கள் கிளை வங்கியில் தாக்கல் செய்யப்பட்ட காசோலை என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையில் ரூ.20 லட்சத்திற்கு தொகை நிரப்பப்பட்டுள்ளது. மனுதாரர் எங்கள் வங்கியில் ம.சா.ஆ.1 காசோலையை தாக்கல் செய்த போது funds Insufficent என்று திருப்பப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணம் எங்கள் கிளையில் கொடுக்கப்பட்ட ரிட்டன் மெமோ ஆகும். எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லாததால் மேற்படி காசோலை திருப்பப்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

மனுதாரர் கவிதா எங்களது கிளையில் தான் கணக்கு வைத்துள்ளார் என்றால் சரிதான். மனுதாரரின் வங்கி கணக்கில் எவ்வளவு வைப்பு உள்ளது,

எவ்வளவு பணம் எடுக்கப்பட்டது என்ற விபரம் அவரது வங்கி கணக்கை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–**

இல்லை.